# மதுவரிக் கட்டளைச் சட்டம்

## மதுவரி அறிவித்தல் இல – 05 / 2019

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 4, 13 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கிழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் .27. ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில்,

(1) தீவு முழுவதும் தொடர்பிலும், வெளிநாட்டு மதுபானங்களின் சில்லறை விற்பனையின் அதிகூடிய அளவானது 80 (எண்பது) தொகை லீற்றராக இருத்தல் வேண்டுமெனவும்,

(2) குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் பேரிலன்றி தீவு முழுவதும் தொடர்பிலும் தூய எண்ணத்துடன் தனிப்பட்ட நுகர்வுக்காகவும் மற்றும் பாவனைக்காகவும் வெளிநாட்டு மதுபானங்களை இடம்பெயர்தலுக்கான அல்லது உடமையில் வைத்திருப்பதற்கான ஆகக் கூடிய அளவானது 80 (எண்பது) தொகை லீற்றர்களாதல் வேண்டுமெனவும்

இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய 1947/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 985 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

மங்கள சமரவீர,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01.
2019 செத்தெம்பர் 27 ஆம் திகதி .